30.09.2024

**HMOP. No. 48/ 2023 ம.சா.1– செந்தில் முருகேசன் த/பெ. சுப்பையா**

சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :**

என்னுடைய ஊருக்கும் எதிர் மனுதாரரின் ஊருக்கும் இடையே சுமார் 3 கீமி தொலைவு ஆகும். எதிர்மனுதாரர் எனக்கு திருமணத்திற்கு முன்பு உறவினர் இல்லை. எதிர்மனுதாரின் சித்தப்பா திரு. ஆதியப்பன் சொன்னதின் பெயரில் எதிர்மனுதாரரை பெண் பார்க்க சென்றோம். திரு ஆதியப்பன் எதிர் மனுதாரரின் தகப்பனாருடன் உடன் பிறந்தவரா என்றால் இல்லை அவரின் சின்னம்மாவின் கணவர். எனது மாமனாரின் தயாரும் ஆதியப்பனின் தயாரும் உடன் பிறந்த சகோதரிகளா என்றால் இல்லை. நான் ஆதியப்பனின் மூலமாக பெண் பார்த்தேன் என்று சொல்வது தவறு என்றும் எதிர் மனுதாரர் அவர்க்கு உறவினர் என்றால் சரியல்ல. நான் பெண் பார்க்க ஒரு முறை தான் சென்றேன். எனது தந்தை மற்றும் உறவினர்கள் எத்தனை முறை எதிர்மனுதாரரை பார்த்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் அப்போது ஊரில் இல்லை. நான் திருமணத்திற்கு முன் என்ன தொழில் செய்து வந்தேன் என்றால் ஆந்திராவில் வாகனங்களை கழுவும் தொழிலை ஒப்பந்தமாக எடுத்து செய்து வந்தேன். தற்போது சென்னையில் ஜவுளி கடையில் லோடு மேனாக வேலை பார்த்து வருகிறேன். நான் பி.ஏ படித்துள்ளேன். நான் லோடு மேனாக வேலைப்பார்ப்பதாக பொய்யாக சொல்கிறேனா என்றால் சரியல்ல. நான் பெண் பார்ப்பதற்காக என் தந்தை, என் சகோதரர், மற்றும் பங்காளிகள் ஆகியோருடன் சென்றோம். எனது தாய் மாமன் புதுக்கோட்டையில் மூத்த வழக்கறிஞராக உள்ளார் என்றால் சரிதான். பெண் பார்க்கும் சமயம் என் தாய்மாமாவை நான் அழைத்து செல்லவில்லை. பெண் பார்க்கும் சமயத்தில் நான் எதிர்மனுதாரருடன் தனியாக பேசவில்லை. நாங்கள் பெண் பார்க்கும் சமயத்தில் பெண்ணிடம் இந்த திருமணத்தில் விருப்பம் உள்ளதா என்று கேட்டோமா என்றால் கேட்கவில்லை. திருமணத்திற்கு முதல் நாள் நிச்சயதார்த்தம் நடைபெற்றது. திருமணம் செய்து கொள்ள சம்மதம் என்று எதிர் மனுதாரரின் வீட்டினர் சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு தெரிவித்தார்கள். எங்கள் வீட்டில் இருந்து பெண் வீட்டிற்கு நேரில் சென்று தான் பேசிமுடித்தார்கள். திருமணத்திற்கு முன்பு வரை எதிர் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் வீட்டார் பெண் பார்த்த முதலே அவ்வப்பொழுது என் மணம் நோகும் படியும் எனது உறவினர் மனம் நோகும் படியும் முகம் சுளிக்கும் படியும் நடந்து கொண்டார்கள் என்று சொல்லியுள்ளேன். அவ்வாறு எத்தனை முறை நடந்து கொண்டார்கள் என்றால் ஒரு

முறை நடந்து கொண்டார்கள். திருமணத்திற்கு முதல் நாள் அவ்வாறு நடந்து கொண்டார்கள். எதிர் மனுதாரர் மற்றும் அவரது வீட்டார்கள் முகம் சுளிக்கும் படி நடந்து கொள்ளவில்லை என்றும் நான் எதிர்மனுதாரரை விவகாரத்து செய்வதற்காக பொய்யாக அவ்வாறு சொல்லியுள்ளேனா என்றால் சரியல்ல. பெண் அழைக்க சென்றபோது என்னையும் என் உறவினர்களையும் வேண்டாத விருந்தாளியை போல நடத்தினார்கள் என்றும் கெட்டுப்போன உணவை பரிமாரினார்கள் என்றும் பொய்யாக சொல்லியுள்ளேனா என்றால் சரியல்ல.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
திருமயம்.